மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நாம் கட்டாயப் படுத்தும் அவசியம் இல்லாமல், அது எல்லா விழாக்களிலும் முன்னணியில் இருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: சிதம்பரத்திலேயுள்ள விவசாயப் பண்ணைகளிலும் இசையின் மூலமாக பயிர்கள் நல்ல முறையில வளரும் என்று சொன்னார்கள். அந்த இசை நம்முடைய தென்னிந்திய இசையா அல்லது வெளிநாட்டு இசையா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எல்லாவிதமான இசையிலும் வளரலாம்.

Gazetted Headmasters in Government 'B' Wing High Schools

* 22 Q.—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that there are two categories of Gazetted Headmasters in the Government 'B' Wing High Schools in the State, one category promoted as Gazetted Headmasters in accordance with their seniority in the State as the Unit and the other with the Revenue District as the Unit; and

(*b*) if so, whether the Gazetted Headmasters promoted from the latter category are eligible for promotion as District Educational Officers as provided for in G.O. Ms. No. 1786, Education, dated 17th October 1974?

அரசினர் 'B' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளின் அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மேற்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இம்மாநிலத்தில் அரசினர் 'B' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில், மாநிலம் முழுவதையும் ஒரு யூனிட்டாக எடுத்துக் கொண்டு தத்தம் பணி மூப்பு நிலைக்கிணங்க பதவி உயர்வு பெறுகின்ற அரசிதழ் பதவி பெற்ற தலைமை ஆசிரியர்கள் என்று ஒரு வகையினரும், வருவாய் மாவட்டத்தை ஒரு யூனிட்டாக எடுத்துக் கொண்டு தத்தம் பணி முப்பு நிலைக்கிணங்க பதவி உயர்வு பெறுகின்ற அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள் என்ற இன்னொரு வகையினரும் ஆக, இரு வகையினர் உள்ளனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், கல்வித் துறையின் 17–10–1974 ஆம் நாளிட்ட 1786–எண் அரசாணையில் வகைசெய்துள்ளவாறு மேற்சொன்ன இருவகையினரில், பின்னர் சொல்லப்பட்ட வகையைச் சேர்ந்த அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள் மாவட்டக் கல்வி அதிகாரிகளாகப் பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதி உள்ளவர்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை

(இ) முன்பு, அரசு 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் அரசிதழ் பதிவுள்ள தலைமையாசிரியர் பணிக்கு மாவட்ட அளவில் மூப்பு நிலைப்படி நியமனம் செய்யப்பட்டனர். 17–10–74 நாளிட்ட கல்வித்துறை அரசாணை நிலை எண் 1786–ல் மாநில அளவில் மூப்பு நிலைப்படி 'பி' பிரிவு பள்ளிகளில் அரசிதழ் பதிவுள்ள தலைமை ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர்களின் மூப்பு நிலையை எவ்வாறு நிர்ணயிப்பது என்பது அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. கே. எஸ். கணபதி : 17–10–1974–க்கு முன்னர் ஒரேயொரு முறை தான் முன்னாள் கழக உயர்நிலைப் பள்ளியில் உள்ள தலைமையாசிரியர்களுக்கு அரசிதழ் பதிவு கொடுக்கப்பட்டது. அவர்களுக்கு மாவட்ட ரீதியாக அவர்களுடைய "சீனியாரிட்டி"ஐ வைத்துக் கொடுத்தார்கள். இப்போது மாநில அளவில்தான் மூப்பு நிலை நிர்ணயிக்க வேண்டுமென்று இருக்கிறது. அப்படியானால், முன்னரே மாவட்ட ரீதியாக சீனியாரிட்டியை வைத்து அரசிதழ் அந்தஸ்து பெற்ற தலைமையாசிரியர்களுக்கு மாவட்டக் கல்வி அதிகாரி பதவி கொடுக்கப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாவட்டக் கல்வி அதிகாரிகள் பதவி 30 சதவீதம் பி–பிரிவுக்கு என்று ஒதுக்கியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கேட்பது போன்று, ஏற்கெனவே கெஜட்டட் பதவிக்கு வந்திருப்பவர்களை எந்த வகையில் சேர்ப்பது என்பதுபற்றித் தனியாக ஆராயலாம்.

Permission to Tamil Pandits for appearing for B. Litt. Examination

* 23. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have received any representation to permit all the Tamil Pandits to appear for the B. Litt. Examination and to make arrangements for the conduct of the examination in 'B' group subject of the fourth year during the academic year 1975–76 itself; and

(b) if so, the action proposed to be taken by the Government?